# தர்ம சாஸ்த்ரச் சுருக்கம்.



# வர்ணாச்ரம தர்ம காண்டம்.

## 1. வேதங்களும் அதன் பிரிவுகளும் ஸூத்ரங்களும்.

- ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வவேதம் என, வேதங்கள் நான்கு.
- ருக் வேதத்திற்கு ஆச்வலாயனம், கௌஷீதகம் என இரு சூத்ரங்கள்.
- யஜீர் வேதம் க்ருஷ்ண யஜீர் வேதம், சுக்ல யஜூர் வேதம் என இரு பிரிவுகள்.
- க்ருஷ்ண யஜுர்வேதத்திற்கு - போதாயனம், ஆபஸ்தம்பம், பாரத்வாஜம், ஸத்யாஷாடம், வைகானஸம் - என ஐந்து சூத்திரங்கள்.
- சுக்ல யஜுர்வேதத்திற்கு காத்யாயனம் என்ற ஒரே சூத்ரம்.
- ஸாம வேதத்திற்கு - த்ராஹ்யாயனம், ஜைமினீயம் என்று இரண்டு சூத்ரங்கள்.

## 2. வர்ணம்.

பிரம்ம, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ர என நான்கு பிரிவுகள்.

## 3. யுகங்கள்.

- க்ருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் என நான்கு.
- நான்காவதான கலியுகத்தில் பராசரஸ்ம்ருதியே முக்கியமானது.

## 4. கலியுக நிஷித்த தர்மங்கள்.

4.1 ஒரு ப்ராஹ்மணன் 12 வருஷம் கிணற்று நீரிலேயே ஸ்நானம் செய்து வருவானேயானால் அவன் ப்ராஹ்மண்யத்தை இழந்தவனாகிவிடுகிறான்.

4.2 ஜ்யேஷ்டபாகம் கொடுத்தல், ஸந்யாஸம் செய்து கொள்ளல், ஆசௌசத்தைக் (தீட்டை) குறைத்தல், ப்ரஹ்மச்சாரியாக வெகு காலமிருத்தல், க்ருஹஸ்தர்கள் (திருமணமானவர்) தூரதேசத்திற்கு தீர்த்த யாத்திரை செய்தல், யதிகள் சாயங்காலத்தில் வீட்டில் இருத்தல், பிராமணர்கள் தூரதேசத்திற்குச் செல்லுதல், கடல் யாத்திரை செய்தல் இவைகள் கூடாது.

R.முத்துஸாமி அய்யர் அவர்களால் 1937ல் வெளியிடப்பட்ட புத்தகத்திலிருந்து
கருத்து மாற்றமின்றி அப்படியே வழங்கப்படுகிறது.



Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

## 5. திக்கு நியமம்

ஒரு கர்மாவுக்கு திக்கு நியமம் சொல்லப்படாவிட்டால் கிழக்கு, வடக்கு, வடகிழக்கு இவைகளில் ஒன்றை உபயோகிக்கலாம்.

இன்னவிதம் செய்யவேண்டும் என்று சொல்லாதவிடங்களில் உட்காரந்து செய்ய வேண்டியது.

## 6. பிராஹ்மண தர்மம்

பிராஹ்மணனுக்குரிய கர்மங்கள் - 6

6.1 அத்யயனம் செய்தல்

6.2 அத்யயனம் செய்துவைத்தல்

6.3 யாகம் செய்தல்

6.4 யாகம் செய்துவைத்தல்

6.5 தானம் கொடுத்தல்

6.6 தானம் வாங்குதல்

## 7. அக்னிஹோத்ரம்

தகப்பன், தமயன் இவர்கள் அக்னிஹோத்ரஞ் செய்யாதவர்களாயிருந்தால், ஒருவனுக்கும் அக்னிஹோத்ரம் செய்ய அதிகாரமில்லை.
தமயன் அனுமதி கொடுத்தால் செய்யலாம்.
தகப்பன் அனுமதி கொடுத்தாலும் செய்யக்கூடாது.

## 8. அன்ய வேதம் அத்யயனஞ் செய்தல்.

8.1 தனது வேதத்தை விட்டு இதர (வேறு) வேதத்தை அத்யயனம் செய்தல் கூடாது. தன் வேதத்தை அத்யயனம் செய்தபிறகு, இதர வேதத்தை அத்யயனம் செய்யலாம்.

8.2 விடியற்காலத்தில் எழுந்து அத்யயனம் செய்தபிறகு தூங்கக் கூடாது.

8.3 அத்யயனத்திற்கு அருகதையற்றவர்கள் செவியில் விழும்படி அத்யயனம் செய்யக் கூடாது.

R.முத்துஸாமி அய்யர் அவர்களால் 1937ல் வெளியிடப்பட்ட புத்தகத்திலிருந்து
கருத்து மாற்றமின்றி அப்படியே வழங்கப்படுகிறது.



Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

### 9. உபாகர்மம்

9.1 க்ரஹண காலத்திலும், ஸங்க்ரமணத்திலும் (மாதம் பிறக்கும்போதும்) உபாகர்மா செய்யக் கூடாது. யஜுர்வேதிகள் உதயவ்யாபியான (சூரிய உதயத்தின்போது உள்ளதான) பர்வத்திலும் (பௌர்ணமியிலும்), ருக்வேதிகள் உதயவ்யாபியான சிரவணத்திலும் (திருவோண நக்ஷத்திரத்திலும்), ஸாமவேதிகள் ஹஸ்த நக்ஷத்திரத்திலும் உபாகர்மம் செய்யவேண்டியது.

9.2 உபநயனமானபின் (உபயநயனம் ஆன பையன்) 6- மாதம் வரையில் க்ஷவரம் செய்து கொள்ளக் கூடாது. (6 மாதத்திற்குள் உபா கர்மா வந்துவிட்டாலும்) உபாகர்மாவன்று க்ஷவரம் செய்து கொள்ள வேண்டியது.

9.3 ச்ராத்தமும் உபாகர்மமும் சேர்ந்தால் உபாகர்மா செய்துவிட்டு ச்ராத்தம் செய்ய வேண்டியது. ப்ரஹ்மச்சாரிகள் அன்று க்ஷவரமும் செய்து கொள்ள வேண்டும். ச்ராத்தம் ஆனபிறகே உபாகர்மா செய்ய வேண்டும் என்பது பலர் கொள்கை. ஸாம வேதிகள் ச்ராத்தம் ஆனபிறகே உபாகர்மா செய்யவேண்டும்.

### 10. அநத்யயனம். (வேதம் கற்பிக்கக்கூடாத காலம்)

10.1 ப்ரதமை, அஷ்டமி, சதுர்தசி, அமாவாசை, பூர்ணிமா (பௌர்ணமி) இந்த திதிகளிலும், இந்த திதிகளின் முதல்நாள் இரவிலும் அத்யயனம் செய்யக் கூடாது.

10.2 க்ரஹணம், ருதுஸந்திகள் இவைகளிலும் அத்யயனம் செய்யக் கூடாது.

10.3 நிமிந்தரணம் (ப்ராஹ்மணார்த்தம்) சாப்பிட்ட தினம், ப்ரதிக்ரஹம் செய்த தினம் (தானம் வாங்கிய தினம்) இவைகளிலும் அத்யயனம் செய்யக்கூடாது.

10.4 கொடியேறுகிற தினத்திலும் (திருவிழா போன்றவைக்காக), கொடி இறங்குகிற தினத்திலும் அத்யயனம் செய்யக் கூடாது.

10.5 மஹா நவமி, ச்ரவண த்வாதசி, அக்ஷய த்ருதியை, ரதஸப்தமீ, மஹாபரணி, யுகாதி, மன்வாதி இவைகளிலும் அத்யயனம் செய்யக்கூடாது.

R.முத்துஸாமி அய்யர் அவர்களால் 1937ல் வெளியிடப்பட்ட புத்தகத்திலிருந்து
கருத்து மாற்றமின்றி அப்படியே வழங்கப்படுகிறது.



Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

### 11. ப்ராஹ்மணர்களுக்கு ஆபத்விருத்தி க்ருஷி

11.1 உழவு காளைகளை ஒரு பகலின் பாதி காலம் வரையில் (உபயோகித்து) உழவு செய்யலாம். உழவு முடிந்தவுடன் அவைகளைக் குளிப்பாட்டவேண்டியது அவசியம்.

11.2 புருஷர்கள் (ஆண்கள்) ஐம்பது வயதிற்கு மேல் விவாஹம் செய்துகொள்ளவே கூடாது. நிமிந்தரணமும் (ச்ராத்தங்களில்) சாப்பிடக் கூடாது.

### 12. ப்ராஹ்மணர்களுக்கு ஸம்ஸ்காரங்கள்.

12.1 ப்ராஹ்மணர்களுக்கு அவரவர்கள் ஸூத்திரத்தில் கண்டுள்ளபடி 40 ஸம்ஸ்காரங்களும் அதற்கதிகமாயும் உண்டு. அவைகளில் உபநயனம் வரை உள்ள ஸம்ஸ்காரங்கள் மெத்த ஆவச்யங்கள் (மிகவும் முக்கியமானவை). மற்றவை பிரியமிருந்து செய்தால் மிகவும் விசேஷம். ஏனென்றால் ப்ரஹ்மச்சர்யத்திலிருந்து ஸந்யாஸம் பெறலாம் என விதியிருப்பதால் உபநயனத்திற்கு மேற்பட்ட ஸம்ஸ்காரங்கள் அதிகாரத்தைப் பொருத்தவைகளாக ஏற்படுகிறது.

12.2 நாற்பது ஸம்ஸ்காரங்களாவன:

ஸ்மார்த்த கர்மங்கள் 14 ச்ரௌத கர்மங்கள் 26

12.3 ஸ்மார்த்த கர்மங்களாவன:

12.3.1 கர்பாதானம் 2.பும்ஸவனம் 3.ஸீமந்தம் 4.ஜாதகர்மம் 5.நாமகரணம் 6.அன்னப்ராசனம் 7.சௌளம் 8.உபநயனம் 9.ப்ராஜாபத்யம் 10.ஸௌம்யம் 11.ஆக்நேயம் 12.வைச்வதேவம் 13.ஸ்நாநம் 14.விவாஹம்

12.4 ச்ரௌத கர்மங்களாவன:

| | |
|---|---|
| ஐந்து தேவயஜ்ஞங்கள் | ஏழு பாகயஜ்ஞங்கள் |
| ஏழு ஹவிர் யஜ்ஞங்கள் | ஏழு ஸோமஸம்ஸ்தைகள் |

12.5 தேவயஜ்ஞங்களாவன:

1.தேவ யஜ்ஞம் 2.பித்ருயஜ்ஞம் 3.பூதயஜ்ஞம் 4.மநுஷ்ய யஜ்ஞம் 5.ப்ரஹ்மயஜ்ஞம்

12.6 பாக யஜ்ஞங்களாவன:

1.அஷ்டகை 2.ஸ்தாலீபாகம் 3.மாஸிச்ராத்தம் 4.ச்ராவணீ 5.ஆக்ரஹாயணீ 6.சைத்ரீ 7.ஆச்வயுஜீ





Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

12.6 பாக யஜ்ஞங்களாவன:

1.அஷ்டகை 2.ஸ்தாலீபாகம் 3.மாஸிச்ராத்தம் 4.ச்ராவணீ 5.ஆக்ரஹாயணீ 6.சைத்ரீ 7.ஆச்வயுஜீ

12.7 ஹவிர் யஜ்ஞங்களாவன:

12.7. 1. அக்ன்யாதானம் 2.அக்னிஹோத்ரம் 3.தர்ச பூர்ணமாஸம் 4.ஆக்ரயணம் 5.சாதுர்மாஸ்யம் 6.நிரூடபசுபந்தம் 7.ஸௌத்ராமணீ

12.8 ஸோம ஸம்ஸ்தைகளாவன:

12.8. 1.அக்னிஷ்டோமம் 2.அத்யக்னிஷ்டோமம் 3.உக்த்யம் 4. ஷோடசீ 5.வாஜபேயம் 6.அதிராத்ரம் 7.அப்நோர்யாமம்.

ஆக மொத்தம் 40 ஸம்ஸ்காரங்கள்.

12.9 ஸ்மார்த்த கர்மாவில் நிஷ்கரமணம் அதாவது சந்த்ர தர்சனம், சூர்ய தர்சனம் இவை இரண்டையும் சேர்த்து 16 கர்மங்களென்று சிலர் சொல்லுகிறார்கள். இந்த இரண்டையும் விலக்கி ப்ரேத கர்மம், ஸபிண்டீகரணம் இந்த இரண்டையும் சேர்த்து 16 என்று சிலரும், இந்த நாலையும் சேர்த்து 18 என்று சிலரும் ஆக ஸ்மார்த்த சிரௌத கர்மங்கள் 44 என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

13. ருது காலம்.

ருதுவான (வீட்டு விலக்கான) தினம் முதல் 16 தினம் வரையில் ருது காலமென்று பெயர். அதில் முதல் 4 தினங்கள் நீங்கலாகவும், பிறகுள்ள தினங்களில் அஷ்டமி, ஏகாதசி, திரயோதசி, சதுர்தசி, அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, ஷஷ்டி இந்த திதிகள் நீங்கலாகவும் ஸ்திரீகளைக் (மனைவியைக்) கூடலாம். வியாழன், சனி, புதன் இந்த கிழமைகளும், சிரவணம், ரோகிணி, ஹஸ்தம், அனுஷம், ஸ்வாதி, ரேவதி, மூலம், உத்திரம், சதயம் இந்த நக்ஷத்திரங்களும், வ்ருஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, கும்பம், மீனம் இந்த லக்னங்களும் நிஷேகத்திற்கு (சாந்தி முஹூர்த்தத்திற்கு) சிறந்தவைகளாகும். கேட்டை, மிருகசீர்ஷம், புனர்பூசம் இவை மத்யமம். ருது காலத்தில் இரட்டித்த தினமானால் புத்ரனும், ஒற்றைப்படை தினமானால் பெண்ணும் உண்டாகும். ருது காலத்தில் ஸ்த்ரீகளை (மனைவியை)ச் சேராவிடில் மஹா தோஷமுண்டு.





Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

14. பும்ஸவனம் (மூக்குப் பிழிதல்)

14.1 ஸ்த்ரீகளின் கர்ப்பமானது நன்றாய் தெரியும்போது, அதாவது - 3 அல்லது 4வது மாதத்தில் பூச நக்ஷத்திரத்தில் "பும்ஸவனம்" செய்யவேண்டியது.

14.2 கர்ப்பத்திலிருக்கும் சிசு புரள்வதற்கு முன், ஹஸ்தம், மூலம், ச்ரவணம், புனர்பூசம், பூசம், மிருகசீர்ஷம் இந்த நக்ஷத்திரங்கள் புருஷ நக்ஷத்திரங்களாகையால் இவைகளில் "பும்ஸவனம்" செய்யவேண்டியது.

14.3 இதை கர்ப்பம் தோறும் (ஒவ்வொரு குழந்தைக்கும்) செய்யவேண்டும். முதல் கர்பத்திற்குச் செய்வது போதுமென்று சிலர் கொள்கை. ஆனால் இந்த கர்ப்பம் புருஷ ப்ரஜையாகப் பிறக்கவேண்டும் என்று அபேக்ஷிக்கிறவன் (விரும்புகின்றவன்) ஒவ்வொரு கர்ப்பத்திலும் பும்ஸவனம் செய்யவேண்டியது.

15. ஸீமந்தம் முதலிய ஸம்ஸ்காரங்கள்.

15.1 கர்பத்தின் 4, 6, 8வது மாதத்தில் ஸீமந்தம் செய்யவேண்டியது. 6வது மாதம் முதல் ப்ரஸவம் வரையிலும் செய்யலாம். இந்த ஸம்ஸ்காரம் ஸ்திரீகளுக்கு சுத்தியைத் தருவதால் முதல் கர்பத்திற்கே போதுமானது. அன்றியும், சிசுவிற்கு சுத்தியைக் கொடுக்குமாதலால் ஒவ்வொரு கர்பத்திற்குஞ் செய்யவேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள்.

ஸீமந்தமென்கிற ஸம்ஸ்காரம் ஸ்த்ரீகளுக்கு மெத்த ஆவச்யகமாதலால் புருஷன் தேசாந்திரம் (தூர தேசத்திற்கு) சென்றிருந்தாலும், மறித்தாலும் (இறந்தாலும்), மைத்துனன், குரு, கிட்டின தாயாதி இவர்களைக் கொண்டாவது ஸீமந்தத்தை அவச்யம் செய்யவேண்டியது.

---

குறிப்பு:- வரிசை எண் அமைப்பு மற்றும் அடைப்புக் குறிகளுக்குள் உள்ளவை படிப்பவரின் புரிந்து கொள்ளுதலுக்காக கூடுதலாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை மூல புத்தகத்தில் இல்லை. வழக்கத்தில் உள்ள வைதீக கர்மாக்களுக்கு மட்டுமே அடியேனால் மேற்கொண்டு விளக்கம் அளிக்க முடியும். இது ஏன் இப்படிக் கொடுக்கப்பட்டுள்ளது ஏன் இப்படி இருக்கக்கூடாது என்பது போன்ற குதர்க்கமான கேள்விகளுக்கு பதில் அளிக்க இயலாது.





Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

15.2 ஜாதகர்மம் :-

ஒருவனுக்கு "சிசு" (குழந்தை) பிறந்தால் உடனே ஸ்நாநஞ்செய்து தானம் முதலியவைகளைச் செய்யவேண்டும். புத்ர ஜனன தினம் முழுமையும் (பிறந்த அன்று) அவன் சுத்தனாகையால் அவன் தானஞ்செய்வதும், அவனிடம் ப்ரதிக்ரஹம் வாங்குவது (தானம் பெறுவது) குற்றமாகாது. மரண ஆசௌச மத்தியில் (இறப்புத் தீட்டின் மத்தியில்) குழந்தை பிறந்தால் தீட்டுப்போன பிறகு "ஜாதகர்மம்" செய்யவேண்டியது. ஜநநாசௌசம் (பிறப்புத் தீட்டு) நேர்ந்த ஸமயத்தில் ஆண் குழந்தை பிறந்தால் உடனே முறைப்படி ஜாதகர்மம் செய்யலாம்.

15.3 ஆசௌசம் நேரிட்ட ஸமயங்களில் புத்ரன் பிறந்தால், ஜனகன் (பெற்றவன்) அச்சமயம் ஆசௌசத்திலிருந்து விடுபட்டு சுத்தியைப் பெறுகிறான்.

15.4 நாமகரணம் :-

பிறந்தது முதல் 11வது தினத்திலாவது, முதல் வருஷ முடிவிலாவது பிறந்த குழந்தைக்குப் பெயர் வைக்கவேண்டும். குலதெய்வத்தின் பெயரையும் முன்னோர்களின் பெயரையும் வைப்பது ச்லாக்யம்.

15.5 காது குத்துதல் :-

சித்திரை, கார்த்திகை, தை, பங்குனி இந்த மாதங்களில் சுக்லபக்ஷத்தில் நல்லதினம் பார்த்து, பல் முளைத்தவுடனும், தாயின் மடியில் ஏறி இறங்கத் திறமை வந்தபோதும், ஊசியில் பட்டைக் கோர்த்து அதை ஸமமாய் இரட்டையாகச் சேர்த்துக் குத்தவேண்டும்.

15.6 சூர்ய சந்த்ர தர்சன காலம்:-

மூன்றாவது மாதத்தில் குழந்தையை அறை, கூடம், தொட்டில் இவைகளிலிருந்து எடுத்து சூரியனுக்குக் காட்டவேண்டும். அதாவது சூர்ய தர்சனம் செய்து வைக்க வேண்டும். அவ்விதமே நான்காவது மாதத்தில் சந்த்ர தர்சனமும் செய்து வைக்கவேண்டியது.





Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

15.7 அன்னப்ராசனம்:-

6-வது மாதத்தில் "அன்னப்ராசனம்" செய்யவேண்டும். அமுதூட்டுதல் விதிமுறைப்படி நடத்தப்படவேண்டும். அன்னத்துடன் தயிர், நெய், தேன் இவைகளைச் சேர்த்து ப்ராசனம் செய்து வைக்கவேண்டும்.

15.8 சௌளம் :-

மூன்றாவது வயதில் விதிப்படி குடுமி வைக்கவேண்டியது. தாயார் கர்ப்பவதியாயிருந்தால் கூடாது, ஞாயிறு, செவ்வாய், சனி, பிரதமை, சதுர்த்தி, நவமி, ஷஷ்டி, சதுர்தசி, கார்த்திகை, பூரட்டாதி, உத்திரட்டாதி இவைகள் கூடாது.

அச்விநி, திருவோணம், ஸ்வாதி, சித்திரை, பூசம், புனர்பூசம், அவிட்டம், இவைகளில் செய்யலாம். ஜந்ம நக்ஷத்திரம் கூடாது.

15.9 ஸ்த்ரீகளுக்கு உபநயனம் (?)

ஸ்த்ரீகளுக்கு விவாஹமே உபநயன ஸ்தானீயம். அதற்கு முந்திய எல்லா ஸம்ஸ்காரங்களும் உண்டு. அவைகளை மந்திரமன்னியில் (மந்திரமில்லாமல்) செய்யவேண்டியது. ஸ்வகாலத்தில் (உரிய காலத்தில்) செய்யாவிட்டால் ப்ராயச்சித்தமுண்டு.

15.10 அக்ஷராப்யாஸம் :-

5-வது வயது வந்தபிறகு விஷ்ணு விழித்திருக்கும் மாதங்களில் அக்ஷராப்யாஸம் செய்யது வைக்கவேண்டியது. உத்தராயணம் ச்லாக்யம். மாசி மாதம் கூடாது. ஆடி மாதம் நலம். செவ்வாய், சனி கூடாது. திருவோணம், ஹஸ்தம், பூசம், மிருகசீர்ஷம், அவிட்டம், ஸ்வாதி, சதயம், அனுஷம், கேட்டை, சித்திரை இந்த நக்ஷத்திரங்கள் ச்லாக்யம் (நன்று).

ஹரி, லக்ஷ்மி, பார்வதி, சரஸ்வதி, மஹர்ஷி, வித்யை இவர்களைப் பூஜித்து ஆஜ்யாஹுதி செய்யவேண்டியது. பிறகு ப்ராஹ்மண பூஜை செய்யவேண்டியது. குமாரன் மேற்கு முகமாயும், குரு கிழக்கு முகமாயும் உட்கார்ந்துகொண்டு அக்ஷராப்யாஸம் செய்வித்தல் வேண்டும். பிரதமை, அஷ்டமி, பௌர்ணமி இவை அனத்யயன தினங்களாகையால் இவைகளில் ஒருபோதும் படிக்கக்கூடாது.





Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

15.11 உபநயனம் ஆவதற்கு முன் பாலர்களுக்கு விதி நிஷேதங்கள் (சாஸ்திர விரோதம்) கிடையாது. ஆனால் கள் குடிப்பது போன்ற மஹா பாதகங்களைச் செய்ய விடக்கூடாது.

15.12 5 வயதிற்கு மேற்பட்டவர்களை அவரவர்களின் இஷ்டப்படி செய்யவிடாமல் ஆச்ரமத்திற்குத் தக்கவாறு நடத்தப் பெற்றோர்கள் முயலவேண்டும். 6 வயதிற்கு உட்பட்டவர்களை சண்டாளன், ரஜஸ்வலை (தீட்டுக்காரர்கள்) தொடுவதினால் அசுத்தி ஏற்படாது. உபநயனத்திற்கு முன் நியமமில்லை.

16.0 உபநயனம் முதற்கொண்டு உள்ள ஸம்ஸ்காரங்கள்

16.1 கர்பத்திலிருந்து 8-வது வயதில் ப்ராஹ்மணர்களுக்கு "உபநயனம்" செய்யவேண்டும். வஸந்த காலம் ச்லாக்யம். தை, மாசி, பங்குனி மாதங்கள் நல்லது. அனத்யயனமும், ஸங்க்ரமணமும் (மாதப்பிறப்பு) கூடாது. நிமித்தம்பற்றி வருவதை அனத்யயனத்திலும் செய்யலாம்.

ஜ்யேஷ்ட (ஆனி) மாதத்தில் ஜேஷ்டனுக்கு (முதல் பையனுக்கு) உபநயனம் செய்யக்கூடாது. சந்த்ரன் குறைவுபடும்போதும், சுக்ரன் 8வது இடத்திலிருக்கும்போதும், சூரியன் ராசியின் முதற் பாகத்திலிருக்கும்போதும், அனத்யாயங்களிலும், திரயோதசி, சதுர்தசி, பர்வ (பௌர்ணமி), ப்ரதமை, சதுர்த்தி, ஸப்தமி, அஷ்டமி, நவமி, ஏகாதசி இவைகளிலும் சாகாதீசனுடைய (தன் சாகையின் அதிபதியான க்ரஹம்) அஸ்தமய காலத்திலும் உபநயனம் செய்யக்கூடாது.

சாகாதீச விபரம் :

| | | | |
|---|---|---|---|
| ருக் வேதத்திற்கு | அதிபதி | ப்ருஹஸ்பதி | வியாழக்கிழமை |
| யஜூர்வேதத்திற்கு | அதிபதி | சுக்ரன் | வெள்ளிக் கிழமை |
| ஸாமவேதத்திற்கு | அதிபதி | அங்காரகன் | செவ்வாய் கிழமை |
| அதர்வவேதத்திற்கு | அதிபதி | புதன். | புதன் கிழமை |

தன் சாகையின் அதிபதியின் கிழமையில் உபயநயனம் செய்வது மிகநல்லது.

தன் சாகையின் அதிபதி லக்னத்திலிருந்து 4, 7, 10ம் இடங்களில் இருக்கும்போது உபநயனம் செய்வது சுகத்தைக் கொடுக்கும்.






Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

16.2.1 உபநயனத்திற்கு 16-வயது வரையில் கௌணகாலமானாலும் (அதிகபக்ஷ வயது வரம்பு-இதன் பிறகு எவ்வித ப்ராயச்சித்தம் செய்தும் உபநயனம் செய்வதற்கில்லை) 8-வயதிற்கு மேல் (.... முக்யகால அகரணேந யோ தோஷ: ... என்று) ப்ராயச்சித்தம் செய்தே உபநயனம் செய்யவேண்டும்.

16.2.2 16-வயதிற்குள் உபநயனம் செய்யாவிடில் அவனுக்கு ப்ராஹ்மண்யம் போய்விடும். அத்தகையவன் அத்யயனம் செய்வது முதலான ஒரு வைதீக கர்மத்திற்கும், தானங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அர்ஹதை உடையவன் அல்ல.

16.3 பூநூல் நூற்க அதிகாரம் உள்ளவர்கள்:

சுமங்கலி, கன்னிகை (பூப்பெய்தாத பெண்) அல்லது விதவை இவர்கள் பருத்தியினால் நூர்க்கவேண்டும்.

16.4 யஜ்ஞோபவீதம் செய்யும் முறை :



16.4.1 சுத்தமான இடத்தில் உட்கார்ந்து வலது கையின் நாலு விரல்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு அதில் அந்த நூல்களை மூன்று இழைகளாக 96 தடவை சுற்றினால் அது பூநூலாகும். அதற்குத்தான் "ஷண்ணவதி" என்று பெயர்.

16.4.2 அதை தீர்த்தத்தால் சுத்தி செய்து முறுக்கி மூன்றாக மடித்து முறுக்கை ஆற்றி (மீளவிட்டு) எடுத்தால் ஒன்பது தந்துக்களுடன் ஓர் ஸரமாகும்.

16.4.3 அதை மூன்று வளையமாகச் செய்து வலம்புரியாய் முடிபோடவேண்டும். அதற்குத்தான் "யஜ்ஞோபவீதம்" என்று பெயர்.

16.4.4 யஜ்ஞோபவீதம் தொப்புள் வரையிலும் நீளமுள்ளதாயிருக்கவேண்டும். அதற்குக் குறைந்தால் ஆயுஸ்ஸைக் குறைக்கும். அதிகமாயிருந்தால் செய்யும் கர்மங்கள் நஷ்டமாகும்.

16.5.1 க்ருஹஸ்தன் 3-வது வஸ்திரம் தரித்துக்கொள்ளவேண்டும். ஸௌகர்யப்படாவிட்டால் அதற்குப் பதிலாக மூன்றாவது பூநூலைத் தரிக்கலாம். இரண்டுமில்லாமல் இருக்கவே கூடாது. இருந்தாலோ அவன் சூத்திரத் தன்மையை அடைந்து நாயாகப் பிறப்பான்.






Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

16.5.2 கோபத்தால் பூநூலை அறுத்துக்கொண்டால் 3 அல்லது ஒன்றாவது க்ருச்ரம் (இது பின்னர் விளக்கப்படும்) செய்து உடனே பூநூலைத் தரிக்கவேண்டும்.

16.5.3 யஜ்ஞோபவீதத்தில் உரோமம் (மயிர்) இருந்தால் அதை (உரோமத்தை) உடனே எடுத்தெறிந்துவிட்டு 10 தடவை "காயத்ரியை" உச்சரித்து தீர்த்தத்தினால் (பூநூலை) அலம்பவேண்டும்.

16.5.4 பூநூலுக்கு முடிபோடும்போது ஹரி ஹர ப்ரஹ்மாதிகளை நமஸ்கரிக்கிறேன் என்று சொல்லவேண்டும்.

16.5.5 பூநூலின் 96 சுற்றுகளில் ஒவ்வொன்றும் நான்கு அங்குலமிருக்கவேண்டும்.

16.6 யஜ்ஞோபவீத தாரண மந்த்ர:

16.6.1 யஜ்ஞோபவீதம் பரமம் பவித்ரம் ப்ரஜாபதே: யத்ஸஹஜம் புரஸ்தாது|
ஆயுஷ்யம் அக்ரியம் ப்ரதிமுஞ்ச சுப்ரம் யஜ்ஞோபவீதம் பலமஸ்து தேஜ: ||

16.6.2 ஜீர்ண யஜ்ஞோபவீத விஸர்ஜந மந்த்ர:|
உபவீதம் பிந்நதந்தும் ஜீர்ணம் கச்மலதூஷிதம் |
விஸ்ருஜாமி ஜலே ப்ரஹ்ம வர்ச: தீர்காயுரஸ்து மே||

16.7 தண்டம் :|

பில்வம், புரசு, உதும்பரம், அச்வத்தம்(அரசு) இவைகளை தண்டத்திற்கு உபயோகப் படுத்தலாம். அந்த தண்டம் அவரவர்களின் தலை மட்டம் இருக்கவேண்டும்.

16.8 அஜினம் |

ப்ரஹ்மசாரிகள் கிருஷ்ண ம்ருகத்தின் (மான்) தோலை உபவீதமாகத் தரிக்கவேண்டும். கோவின் சர்மாவையும் (தோலையும்) உபயோகப் படுத்தலாம்.

16.9 மௌஞ்சீ|

ப்ரஹ்மசாரிகள் முஞ்சிக்கயிற்றை மூன்று சுற்றில் இடுப்பில் தரிக்கவேண்டும். அதில் கௌபீனம் (கோமணம், உள்ளாடை) கட்டிக் கொள்ளக்கூடாது, முஞ்சிப் பில் கிடைக்காவிட்டால் நாணலை உபயோகப்படுத்தலாம்.

குறிப்பு:- இப்புத்தகம் மொத்தம் 282 பக்கங்களைக் கொண்டுள்ளது.





Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

16.10 உபநயன காலநியமம்:

உபநயன காலத்திற்கு முன் பட்டு தரித்து (உடுத்தி) உபநயன காலத்தில் வெண்மையான வஸ்த்ரம் புதிதாக தரிக்கவேண்டும். கௌபீனமும் தரிக்கவேண்டும். 4-வது தினத்தில் (உபநயனமானபிறகு) எல்லாவற்றையும் விஸர்ஜனம் செய்துவிட்டு மறுபடியும் கௌபீனம் (கோமணம்) முதல் புதிதாகத் தரிக்கவேண்டியது. கௌபீனமில்லாமல் ஒருபோதும் இருக்கவே கூடாது. ப்ரம்ஹசாரிகளுக்கு சாயவஸ்த்ரம் (கலர் துணிகள்) கூடாது.

16.11 கிருஹஸ்தனுக்கும் ப்ரஹ்மசாரியைப் போல் கடிஸூத்ரம் (அரைஞ்ஞாண் கயிறு, அரணாக்கயிறு) ஆவச்யகம். அதில்லாமல் செய்யப்படுங் கர்மங்கள் நிஷ்ப்ரயோஜனங்கள். அவன் நக்னன்(நிர்வாணமானவன்) என்று சொல்லப்படுவான்.

16.12 உபநயன காலத்தில் பிக்ஷை வாங்குவது:-

முதலில் தாய், ஸஹோதரி (விவாஹமானவள்), தாயுடன் பிறந்தவர்கள், தகப்பனுடன் பிறந்தவர்கள், அன்னபான பந்துக்கள் இந்த வரிசையாய் (பிக்ஷை) கேட்கவேண்டும். விதவை, கர்ப்பிணி இவர்களைக் கேட்கக் கூடாது.

16.13 அன்ன பிக்ஷாசரண நியமம் :-

அன்னபிக்ஷை எடுக்கும் ப்ரஹ்மசாரியை அதட்டிக்கடிந்து பேசக்கூடாது. பிக்ஷை எடுப்பவன் தன் ஆகாரத்திற்கு மிஞ்சி எடுக்கக்கூடாது. அப்படி எடுத்து மீந்துவிட்டால் அதை பூமியில் புதைத்துவிடவேண்டியது. அல்லது தண்ணீரில் கரைத்துவிடவேண்டும். குரு அவர் தாயாதி, தன் தாயாதி, அம்மான் முதலிய பந்துக்கள் வீட்டில் பிக்ஷை எடுக்கக்கூடாது. பிக்ஷை, ஊறுகாய், கறி இவைகளை உபபாத்திரமின்றி (வேறு தனி பாத்திரமின்றி) கையினால் கொடுக்கக் கூடாது.

16.14 ப்ரஹ்மயஜ்ஞம் :-

உபநயன தினம் முதல் மறுநாள், அல்லது நாலாவது நாளிலிருந்து ஸந்த்யா வந்தனத்தைப்போல் ப்ரஹ்மயஜ்ஞத்தையும் நித்யம் செய்யவேண்டியது.

16.15 ஸமிதாதானம் :-

ப்ரஹ்மசாரிகள் இரு ஸந்த்யா காலங்களிலும் ஸமிதாதானம் செய்யவேண்டும்.






Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

16.16.1 காலாதீதப்ராயச்சித்தம் :-

ஒவ்வொரு கர்மாவும் அதன் அதற்கு ஏற்பட்ட காலத்தில் செய்யப்படாவிட்டால் ப்ராச்சித்த பூர்வகமாய் மேற்படி கர்மாவைச் செய்துவிட்டு அடுத்த கர்மாவைச் செய்யவேண்டும்.

16.16.2 சௌத்தில் 50 ப்ராஹ்மணர்களுக்கும், உபநயனத்தில் 100 ப்ராஹ்மணர்களுக்கும், விவாஹத்தில் சக்திக்குத் தக்கபடியும், ஆதானத்தில் 100-பேருக்கும், ருதுசாந்தியில் 10, 12-ப்ராஹ்மணர்களுக்கும் அன்னமிடவேண்டியது. கர்பாதானத்தில் இரண்டு ப்ராஹ்மணர்களுக்கு அன்னமிடவேண்டும்.

17. பத்நீ ரஜஸ்வலையாய் (மாதவிலக்கு) இருந்தால் நாந்தி செய்யக் கூடாது.

18. சௌளாதி கர்மாக்கள் செய்யக்கூடாத காலம் :-

தாயார் ரஜஸ்வலையாக இருந்தாலும், அல்லது 5 மாதத்திற்கு மேல் கர்பமாய் இருந்தாலும், சௌளம், உபநயனம், விவாஹம் ஒன்றும் செய்யக்கூடாது. உபநயனம் செய்து வைக்கிறவனுடைய பார்யாள் 6 மாதத்திற்கு மேல் கர்ப்பவதியாய் இருக்கக்கூடாது.

19. உபநயனஞ்செய்யத் தகுந்தவர்கள்:-

(உபநயன பிள்ளைக்குத்) தகப்பன், பாட்டன், ஸஹோதரன், ஜ்ஞாதிகள், ஸமான ப்ரவமுள்ள ஸகோத்ரர்கள் இவர்கள் உபநயனம் செய்விக்கலாம். முன் சொன்னவர்கள் இல்லாவிடில் ஸ்வஸூத்ர காரர்களும், கிட்டின பந்துக்களும் செய்யலாம். பெண்டிழந்தவன் உபநயனம் செய்வதில் அதமனாவான்.

20. யமோளோத்பவர்களின் ஜாதகர்மாதி விதி:-

20.1 ஒரே தாயின் வயிற்றில் இரட்டையாகப் பிறந்த பிள்ளைகளுக்கு ஒரே லக்னத்தில் ஒரே வேதியில் ஒரே ஆசார்யனால் ஜாதகர்மம் முதல் உபநயனம் வரையில் செய்யப்படவேண்டும. இரண்டும் பிள்ளையானாலும், பெண்ணாக இருந்தாலும், ஒன்று பெண்ணும் ஒன்று ஆணாக இருந்தாலும், வைதிகங்கள் ஒரே வேதிகையில் ஒரே ஆசார்யனால் செய்யப்படவேண்டியது.





Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

20.2 ஒருவனுக்கு இரண்டு பார்யைகளிடத்தில் ஒரே லக்னத்தில் ஜனித்த குழந்தைகளுக்கும் ஒரே லக்னத்தில் செய்யவேண்டியிருந்தால், இரண்டு வேதிகைகளில் இரண்டு ஆசார்யர்கள் செய்யவேண்டியது. நாந்தியையும் தனியாய் செய்யவேண்டியது.

21. நமஸ்காரம் செய்யத் தகாதவர்கள்:-

வயதில் சிறியவர்களானால், சிறிய தகப்பன், மாமன், மாமனார் இவர்களை நமஸ்காரம் செய்யக்கூடாது. ஆனால் எழுந்து மரியாதை செய்யவேண்டியது.

22. விவாஹத்திற்குரிய கன்யா லக்ஷணம் :-

22.1 செம்பட்டை மயிருள்ளவள், புருஷனைக் காட்டிலும் பருமன் உள்ளவள், தேகம் முழுவதும் உரோமம் உள்ளவள், தலைமயிர் அதிகம் இல்லாமல் இருப்பவள், பூனைக் கண்ணுடையவள், தலைமயிர்போல் கருநிறமுள்ளவள், நக்ஷத்திரம், நதீ, வ்ருக்ஷம், மலை இவைகளின் பெயர் உள்ளவள், வெள்ளை நிறமுள்ளவள், சாதாரண உயரத்திற்கு மேல் நெட்டையாகவோ, குட்டையாகவோ இருப்பவள், மீசை உடையவள், கரகர குரல் உடையவள், பயங்கரமான பெயருடையவள், கர்ஜிக்கும் ஸ்வரம் (குரல்) உடையவள், காக்கைக் குரலையொத்த குரலை உடையவள், வட்டமான கண்களை உடையவள், தேகமெங்கும் துர்நாற்றமுடையவள், முறுக்கிக் கோணலாயுள்ள பற்களை உடையவள், புருவங்கள் ஒன்றாய்க் கூடியிருப்பவள், காலிலாவது கையிலாவது ஆறு விரல்களை உடையவள், இதுபோன்ற அவலக்ஷணங்களுள்ள கன்னிகைகள் விவாஹத்திற்குக் கூடாது.

22.2 ஒருவனுக்கு ஒரே பெண்ணாயிருப்பவளையும் விவாஹம் செய்யக்கூடாது.

22.3 பிள்ளையின் வயதிற்கு பெண்ணின் வயது 1-வது குறைந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் சாஸ்த்ர சம்மதமில்லை.

23. கன்யகாதான கர்த்தா.

23.1 தகப்பன், பிதாமஹன், ஸஹோதரன், தகப்பனுடன் கூடப்பிறந்தவர்கள், மாதாமஹன், மாமன், ஸகோத்ரன், பந்து இவர்கள் ஒரு கன்யகையை தானம் செய்ய அதிகாரமுள்ளவர்கள். இவர்கள் இல்லாவிடில் ஸ்வஸூத்ரிகளும், கிட்டின பந்துக்களும் செய்யலாம்.

23.2 ரோகமுள்ளவன், பைத்யமுள்ளவன் இவர்கள் தானம் செய்யக்கூடாது.





Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

24. சுப காலங்களில் செய்ய வேண்டியது:-

வீடுகளில் சுபம் நடந்தால் பெண்கள், ஸஹோதரிகள் முதலானவர்களுக்குப் புடவை வாங்கிக் கொடுக்கவேண்டும். பெண்ணிற்குச் சொந்தமான புடவைகளை தாயார் ஒருபொழுதும் உபயோகிக்கக் கூடாது.

25. இரண்டு சோபன விஷயம்.

25.1 ஒரே காலத்தில் இரண்டு சோபனங்கள் செய்யக்கூடாது. புத்ரனுக்கு விவாஹமும், புத்ரிக்கு விவாஹமும் ஒரே சமயத்தில் செய்யக்கூடாது. ஒரே வருஷத்தில் இரண்டு பெண்களுக்கு விவாஹம் செய்வது கூடாது. 6 அல்லது 3 மாதங்களாவது சென்றபின் செய்யலாம். அதிலும் வர்ஷ பேதமிருப்பது ச்லாக்யம்.

25.2 புத்ரனுக்கு விவாஹம் செய்து 6 மாதத்திற்குப் பிறகுதான் பெண்ணிற்கு விவாஹம் செய்ய வேண்டும்.

25.3 புத்ரியின் விவாஹத்திற்குப் பிறகு புத்ரனுக்கு உபநயனம் செய்யக்கூடாது. இரண்டு புத்ரர்களுக்குச் சேர்த்து உபநயனம் செய்யக்கூடாது.

25.4 பொதுவாக ஒரு சோபனத்துடன் மற்றொரு சோபனம் செய்யக்கூடாது.

25.5 எந்தக் காரணத்தினாலாவது இரண்டு சோபனம் செய்யும்படி நேர்ந்தால் ஆசார்யர்கள் வெவ்வேறாக இருக்கவேண்டும்.

25.6 ஒரு தாய் வயிற்றில் பிறந்த புத்ரன் புத்ரிகளுக்கு ஒரு தினத்தில் விவாஹம் செய்யும்படி நேர்ந்தால் வேரு க்ராமத்திலாவது, அல்லது வேறு மண்டபத்திலாவது, வேறு லக்னத்திலாவது செய்யவேண்டியது.

26.0 ஸ்வீகார புத்ரர்களின் விஷயம்.

26.1 कुलद्वयं परित्याज्यं दत्तस्यतु विशेषतः ।
आदानेच प्रदाने च तस्य पुत्रो न दोषभाक् ॥

என்ற வசனப்படி ஸ்வீகார புத்ரனுடைய விவாஹத்தில் ஸ்வீகார வம்சத்தின் கோத்திரமும், பிறந்த வம்சத்தின் கோத்திரமும், இந்த 2-கோத்திரங்களின் ப்ரவர ரிஷிகள் ஸம்பந்தப்பட்ட கோத்ரங்களும் நீங்கலாக மற்ற கோத்திரங்களில் விவாஹம் செய்யலாம்.






Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

26.2 ஸ்வீகாரம் செய்துகொண்ட பிறகு ஔரஸன் பிறந்தால் தத்தன் வயதில் பெரியவனயாயிருந்தாலும் கனிஷ்டனாகிறான். ஔரஸனுக்கு விவாஹமான பிறகுதான் தத்தனுக்கு விவாஹம் செய்யவேண்டும்.

27. விவாஹம் (கல்யாணம்)

27.1 ஸபத்னீ புத்ரர்கள் விவாஹ விஷயம்:

ஸபத்னீ புத்ரர்களுக்கு ஜனனத்தையொட்டி ஜ்யேஷ்டத்வம் ஏற்படுவதால் தகப்பன் ஜீவதசையல் இருக்கும்வரையில் வயதின் க்ரமத்தின்பேரில் மூத்தவனுக்கு விவாஹம் செய்யவேண்டும். தகப்பன் இறந்தபிறகு நியமங் கிடையாது.

27.2 ஸீமந்த புத்ரஜனுக்கும், ஸீமந்த புத்ரிக்கும் ஆனி மாதம், ஜன்ம (பிறந்த) - மாதம், திதி, நக்ஷத்திரம், கிழமை இவைகளில் விவாஹாதி சுபமுஹூர்த்தங்கள் செய்யக்கூடாது.

27.3 விஷ்ணு சயன காலம் - அதாவது ஆஷாட சுத்த ஏகாதசி முதல், கார்த்திக சுத்த ஏகாதசி வரையில், அதாவது (ஆனி அமாவாசைக்குப் பிறகு வரும்) சயன ஏகாதசி முதல், (ஐப்பசி அமாவாசைக்குப் பிறகு வரும்) உத்தான ஏகாதசி வரையில் உபநயனம், விவாஹம் முதலியன செய்யக்கூடாது.

27.4 அந்தந்த ஊர்களின் தேவதைகளுக்கு உத்ஸவம் நடக்கும்போது விவாஹம் முதலியன செய்யவே கூடாது. உத்ஸவம் முடிந்தபிறகே செய்யவேண்டியது.

27.5 மாற்றுக்கு மறுதலை விவாஹங் கூடாது.

27.6 ஒருவனுக்கே இரண்டு பெண்களையும் விவாஹம் செய்து கொடுக்கக் கூடாது.

27.7 ஒருவனுடைய இரண்டு பிள்ளைகளுக்கு மற்றொருவனுடைய இரண்டு பெண்களையும் விவாஹம் செய்து கொடுக்கக்கூடாது.

28.0 ஔபாஸனமும் ஸ்தாலீபாகமும்

28.1 ஔபாஸனம்:- ராத்திரி 9 நாழிகைக்குள் ஆரம்பிக்கவேண்டியது. அக்காலம் தவறினால் மறுநாள் ராத்திரியில்தான் ஆரம்பிக்கவேண்டும்.






Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

28.2 முதலில் பௌர்ணமாஸ ஸ்தாலீபாகம் செய்து பிறகு தர்ச ஸ்தாலீபாகம் செய்யவேண்டியது. க்ருஷ்ணபக்ஷத்தில் விவாஹம் நடந்தால் சதுர்தசிவரையில் பௌர்ணமாஸ ஸ்தாலீபாகத்தைச் செய்து, பிறகு தர்சஸ்தாலீபாகத்தைச் செய்யலாம். ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி இந்த மாதங்களில் ஸ்தாலீபாக ஆரம்பம் செய்யக்கூடாது.

28.3 விவாஹம் செய்த ஆறு மாதத்திற்குள் ஸ்தாலீபாகம் செய்யவேண்படியது. செய்யப்படாவிட்டால் பிறகு செய்யும் ஸ்தாலீபாகத்தில் புனர் விவாஹம் செய்யவேண்டியது. இந்தப் புனர் விவாஹத்தில் அடியில் கண்டவைகளை விலக்கி மந்த்ர ஆவ்ருத்தியை மட்டும் செய்யவேண்டியது.

लाजं योक्त्रं तथा सूत्रं स्नानं वस्त्रं भवेत् तथा ।
धारापूर्वं शिलारोहं आवाभ्यां युगवर्जनम् ॥

28.4 பௌர்ணமாஸ ஸ்தாலீபாகத்தை பஞ்சமி வரையிலும், தர்ச ஸ்தாலீபாகத்தை அதற்கு அடுத்த பஞ்சமி வரையிலும் செய்யலாம். இரண்டிலும் திரயோதசி வரையிலும் செய்யலாம் என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

28.5 ஔபாஸனம் விட்டுப்போனால் :- (ஆபஸ்தம்பிகளுக்கு)

ஔபாஸநாக்னி இல்லாவிட்டால் விச்சிந்நாக்நி ஸந்தானம் செய்துகொண்டு ஔபாஸம் செய்து 4 ஆஹுதிகள் செய்யவேண்டும். பத்தினி இல்லாதவர்கள் விதுராக்நி ஸந்தானம் செய்துகொண்டு 2 ஆஹுதிகள் செய்யவேண்டும்.

29.0 ஔபாஸன அக்நி/லௌகீக அக்நியில் செய்யவேண்டிய கார்யங்கள்:

29.1 1. ஸீமந்தம் 2. புநர் உத்வாஹம் 3. பும்ஸவனம்
4. நித்ய ஹோம் 5. வைச்வதேவம் 6. மாஸிச்ராத்தம்
7. அஷ்டகா 8. ஈசாந பலி 9. ஸர்ப பலி

இவைகளை ஔபாஸநாக்நி எனும் வைதீகாக்நியில் பண்ணவேண்டியது.

29.2 1. சௌளம் 2. ஜாதகர்ம 3. கோதானம்
4. ஸ்நாநம் 5. உபநயனம் 6. வ்ரதங்கள்
7. லாஜஹோமம் 8. ஸமித் கார்யம் இவைகளை லௌகீக அக்நியில் செய்யவேண்யடியது.


R.முத்துஸாமி அய்யர் அவர்களால் 1937ல் வெளியிடப்பட்ட புத்தகத்திலிருந்து கருத்து மாற்றமின்றி அப்படியே வழங்கப்படுகிறது.





Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

29.1, 29.2 இதற்கான ம்லோகம் மூலத்தில் க்ரந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

सीमन्तः पुनरुद्वाहः पुंसवः पार्वणं तथा।
पाकयज्ञाश्च गृह्याग्न कार्या अन्यानि लौकिके॥
नित्यहोमो वैश्वदेवं मासिश्राद्धं च पार्वणम्।
अष्टकेशा नसपैज्याः पाकयज्ञाः प्रकीर्तिताः॥
चौलं जातकगोदाने स्नानोपनयने व्रतम्।
लाजहोमस्समित्कार्यं लौकिकाग्नौ विधीयते॥

30.0 தள்ளிவிடத்தகுந்த ஸ்த்ரீகளும், புனர் விவாஹ விஷயமும்

30.1 ஸுராபானம் செய்பவள், ஸாதுக்களால் நிந்திக்கப்படுபவள், புருஷனுக்கே கெடுதி செய்பவள், வேலையாட்களை தொந்திரவு செய்பவள், சிறுதனம் விற்பவள், வீட்டுப் பண்டத்தைப் பாழாக்குகிறவள், பிள்ளை பெறாதவள், பெற்றுப் பெற்று சாகக் கொடுப்பவள், பெண் குழந்தைகளையே பெறுபவள், புருஷனை மனம் நோகும்படி பேசுகிறவள், த்வேஷங்கொண்டவள் போன்ற துர்குணங்கள் அமைந்த ஸ்த்ரீகளைத் த ள்ளிவிட்டு வேறு விவாஹம் செய்து கொள்ளலாம். மேற்கண்ட காரணங்களன்றி ஸ்த்ரீயைத் தள்ளி வேறு மணந்தால் குலம் நசித்துவிடும்.

30.2 பிள்ளை பெறாதவளை 10 வருஷம் பார்த்துக்கொண்டும், பெண்களையே பெறுபவளை 12 வருஷம் பார்த்துக்கொண்டும், பெற்றுப் பெற்று சாகக் கொடுப்பவளை 15 வருடம் பார்த்துக்கொண்டும் வேறு விவாஹம் செய்யலாம்.

30.3 நற்குணம், நன்னடத்தை உள்ளவளுக்கு ரோகம், மலடித்தனம் முதலிய தோஷங்கள் ஏற்பட்டாலும் அவளை சந்தோஷப்படுத்தி அவள் அநுமதயின்பேரில் வேறு விவாஹம் செய்துகொள்ளலாம்.

30.4 மூன்றாவது விவாஹம் செய்யக் கூடாது. அப்படிச் செய்வதாயிருந்தால் மூன்றாவதாக அர்க்க விவாஹம் செய்து நான்காவது விவாஹம் செய்யலாம்.






Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

31.0 ஸஹோதரர்களின் விவாஹ விஷயம்:

31.1 மூத்தவனுக்கு விவாஹம் செய்யாமல் இளையவனுக்கு விவாஹம் செய்யக் கூடாது. ஆனால் மூத்தவன் நபும்ஸகன், தீராதரோகமுள்ளவன், கூன், குருடு, செவிடுள்ளவன், பைத்தியம் பிடித்தவனாகவாவது இருந்தால் (இவற்றில் ஏதாவது ஒன்றிருந்தாலும் - அவனுக்காக பார்க்காமல் அடுத்தவன்) விவாஹம் செய்யலாம்.

31.2 மேற்கண்ட குறைவில்லாத மூத்த ஸஹோதரன் தேசாந்திரம் போயிருந்தால் 12 வருஷ காலம் அவன் வரவை எதிர்பார்த்திருக்கவேண்டும். அப்படியே மூத்த பெண் விவாஹமில்லாமலிருந்தால் இளையவளுக்கு விவாஹம் செய்யக் கூடாது.

32.0 பார்யா பர்த்தாவினிடத்தில் இருக்கவேண்டிய முறை:

32.1 பர்த்தா தரித்திரனாக இருந்தாலும், ரோகியாக இருந்தாலும், மூர்க்கனாக இருந்தாலும் அவனை பார்யை அவமதிப்பாளானால் அவள் அடிக்கடி நாய், பன்றிப் பேடுகளாகப் பிறந்து துன்பமடைவாள்.

32.2 ஸ்த்ரீ வ்ரதம் அநுஷ்டித்து உபவாஸமிருக்கவேண்டுமானால் பர்த்தாவினுடைய அனுமதியின் பேரிலேயே செய்யவேண்டியது. அனுமதியன்னியில் வ்ரதாததிகளைச் செய்தால் புருஷனுடைய ஆயுளைக் குறைக்கும். அவளும் நரகத்தை அடைகிறாள். இதற்கு வசனம்

पत्यौ जीवति या नारी उपोष्य व्रतमाचरेत् ।
आयुष्यं हरते भर्तुस्सा नारी नरकं व्रजेत् ॥

33.0 கர்ப்பிணி ஸ்த்ரீயின் நியமம் :

கர்ப்பிணி ஸ்த்ரீகள் மனக் குழப்பத்துடன் இருக்கக் கூடாது. அசுத்தமான இடத்திலும், உரல், உலக்கை இருக்குமிடத்திலும் உட்காரக் கூடாது. இடைவிடாமல் உட்காரவாவது, நிற்கவாவது, தூங்கவாவது கூடாது. கணப்புச்சட்டி, விபூதிப்பானை இவைகள் அருகில் இருக்கக் கூடாது. தண்ணீரில் இறங்கி முழுகுவதும், நெருப்புத் தணலை எடுத்து வேலை செய்வதும் கூடாது. உறக்கக் கூப்பிடுவதும், அதிகமாகச் சிரிப்பதும் கூடாது. மரத்தடியிலும் போகக் கூடாது.

34.0 விதவா தர்மம்

34.1 விதவை ஒரே வேளை சாப்பிடவேண்டும். பூமியிலேயே படுக்கவேண்டும். பரிமள வஸ்துக்களை தரிக்கக்கூடாது. தாம்பூலம் முதலியவை போட்டுக்கொள்ளக் கூடாது.






Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/

34.2 விதவைகள் கழுத்தில் ருத்ராக்ஷம் முதலிய மாலைகளைத் தரிக்கக் கூடாது.

वितन्तुस्तान्तवीं मालां रुद्राक्षेणेतरेणवा ।
कण्ढेबद्धी या काचित् ब्राह्मणी लीलयाऽपि वा ॥
वितन्तुश्चेतस्तन्तुस्स्यात्तां दृष्टेनंविलोकयेत् ।
कण्ढे तांतु शिलां बद्वा सिन्धावग्नौविनिक्षिपेत् ॥

35.0 நமஸ்காரத்தில் அபிவாதனம் செய்யத் தகாத விஷயம்

35.1 देवान्नदीं सभां वृक्षा नग्नीनपि तथा यतिम ।
दण्डवत् प्रणमेत् भूमौ नाभिवादनमाचरेत् ॥

தேவதைகள், நதி, ஸபை, விருக்ஷங்கள், அக்னிகள், ஸன்யாஸி இவர்களை தண்டம்போல் நமஸ்காரம் செய்ய வேண்டியது. அபிவாதனம் செய்யக்கூடாது.

35.2 ஸ்த்ரீகளை (தனியாக) நமஸ்கரித்தால் அபிவாதனம் செய்யக்கூடாது.

36. குரு ஸிம்ஹ ராசியிலிருக்கும்போது அதாவது மஹாமஹ வருஷத்தில் விவாஹம் செய்யக்கூடாது. நர்மதைக்கு வடபாகத்தில் இந்த நியமம்.

धर्मशास्त्र संग्रहे वर्णाश्रम धर्मकाण्डस्समाप्तः ।

தர்மசாஸ்த்ரச் சுருக்கத்தில், வர்ணாச்ரம தர்மகாண்டம் முற்றுப்பெற்றது.


R.முத்துஸாமி அய்யர் அவர்களால் 1937ல் வெளியிடப்பட்ட புத்தகத்திலிருந்து கருத்து மாற்றமின்றி அப்படியே வழங்கப்படுகிறது.





Sri Vaishnava Kendram Deevalur N.V.Srinivasachariyar M.A, (M.Phil)
vaideekam@gmail.com - www.ahobilam.com
http://groups.yahoo.com/group/vaideekam/